# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

**19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),**
**Egmore, Chennai – 600 008.**
**Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377**
**Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in**


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 31/2016**

திரு. தி. பொன்னுசாமி,
த/பெ பொ. தியாகராஜன்,
84/5, ராஜுவ்காந்தி தெரு,
காலேஜ் கவுஸ் ரோடு,
நாகல் நகர்,
திண்டுக்கல் – 3.

மேல் முறையீட்டாளர்
(திரு. தி. பொன்னுசாமி)

எதிர்

உதவி பொறியாளர்/இ&ப,
நாகல் நகர்,
திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சவுந்தரராஜா மில்ஸ் ரோடு,
இண்டஸ்ட்டிரியல் ரோடு அருகில்,
திண்டுக்கல் – 624 002.

எதிர்மனுதாரர்
(திரு. V. கார்த்திக் உதவி பொறியாளர்/நாகல் நகர்)

**கேட்புரை நாள்: 28–6–2016 & 10.8.2016**

**ஆணை நாள் : 21–10–2016**

திரு. தி. பொன்னுசாமி, த/பெ தியாகராஜன், நாகல் நகர், திண்டுக்கல் அவர்களின் 26.3.2016 நாளிட்ட மனு மேல் முறையீட்டு மனு எண் 31/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 28.6.2016 மற்றும் 10.8.2016 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## <u>ஆணை</u>

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u>**

மின்இணைப்பு எண்.202–006–1483 காளியம்மன் கோவில் தெரு, மற்றும் மின்இணைப்பு எண்.202–006–2163 ஆகிய வற்றை நிரந்தர மின்துண்டிப்பு செய்ய வேண்டியுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 திரு. மாசனத்தேவர், த/பெ பச்சமுத்து தேவர் என்பரின் பெயரில் மின்இணைப்பு எண்.202–006–2163, எண்.31 வெள்ளாளர் தெருவில் உள்ள வீட்டிற்கு 8.7.2015 அன்று வழங்கப்பட்டுள்ளது.

2.2 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட மின்இணைப்பு அவருக்கு சொந்தமான இடத்தில் வேறு நபர் பெயரில் வழங்கப்பட்டுள்ளதால் அந்த மின்இணைப்பை மின்துண்டிப்பு செய்ய வேண்டும் என்று செயற்பொறியாளருக்கு மனு செய்துள்ளார். உதவி பொறியாளர், சம்பந்தப்பட்ட இடத்தினை சர்வே செய்து சம்பந்தப்பட்ட துறையினரின் சான்று ஆகியவற்றை சமர்ப்பித்தால் அதன் மீது அரசு வழக்கறிஞரின் கருத்து கேட்டு மின்துண்டிப்பு நடவடிக்கை எடுக்க முடியும் என்று பதில் தெரிவித்தார். மேலும், மின்இணைப்பு எண்.1483, மீட்டர் பலகை தற்பொழுது அவருக்கு சொந்தமான இடத்தில் மாற்றி வைக்கப்பட்டுள்ளதால் அந்த மின்இணைப்பையும் துண்டிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

2.3 மேல்முறையீட்டாளர் திண்டுக்கல் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்கவும் மன்றத்திற்கு தன்னுடைய முறையீட்டை தெரிவித்துள்ளார். மன்றம் தன்னுடைய தீர்வை 11.2.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது.

2.5 மன்றத்தின் மேற்கண்ட ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவினை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் தீர்வு</u>

மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தன்னுடைய தீர்வை 11.2.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த தீர்வின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ <u>ஆணை :-</u>*

*திரு. தி. பொன்னுசாமி, 84/5, ராஜுவ் காந்தி தெரு, நாகல் நகர் திண்டுக்கல் அவர்களுக்கு அறிவிப்பது யாதெனில்,*

*மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள வீடு மற்றும் அதன் கதவு எண்.தனக்கு சொந்தமானது என்பதற்கான வருவாய் ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காததாலும் மின்வழங்கல் விதி 21 மற்றும் 23(A) (1A) விதிமீறல்கள் உள்ளன என்று தெரிவித்து மின்துண்டிப்பு கோரவில்லை என்பதாலும் மேலும் அது போன்ற விதி மீறல்கள் இல்லை என்பதாலும் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதி 33(4)இன் படி இசைவு பத்திரங்களை முறித்துக் கொள்ள வேண்டும் என்று உரிமத்தாரர் எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்பதாலும் இந்த வழக்கு சம்பந்தமாக மின்இணைப்பு எண்2163 மற்றும் 1493 யும் மின்துண்டிப்பு செய்ய இயலாது என்று இம்மன்றத்தால் தீர்வு செய்யப்படுவதால் தங்களது மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. ”*

4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :–</u>

4.1 திரு. மாசாணத்தேவர், த/பெ பச்சமுத்து தேவர் வழங்கிய விண்ணப்பத்தில் (டெஸ்டுரிப்போர்டு) படிவத்தில் LT மின்இணைப்பு பெறும்பொழுது போதுமான இடவசதி உள்ளதா ? அல்லது அருகில் இருப்பவர்கள் இடத்தில் கிராசிங் செய்தால் அப்செக்சன் ஏதும் இருந்தால் அவர்களிடம் (No Objection) மறுப்பின்மை சான்று வழங்க வேண்டும் என்று உள்ளதை நுண் ஆய்வு செய்யும் படி வேண்டுகிறார். மேலும் அவ்வாறு இருந்தால் மின்துண்டிப்பு செய்ய அவரே ஒப்புக் கொள்கிறார் என்று திரு. மாசனத்தேவர் கையொப்பமிட்டு உள்ளதை வைத்து மின்துண்டிப்பு செய்ய இதுநாள் வரை 24.3.2016 நாள் வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

4.2 வரிசை எண்.2ல் சுட்டிக்காட்டப்பட்ட ஆவணம் – நடப்பு ஆண்டில் மாநகராட்சியில் இருந்து பெறப்பட்டது வீட்டு வரி ரசீது நடப்பாண்டு மாநகராட்சி TS 564ல் இருந்து பெறப்பட்ட

சொத்துவரி எண்.42416ல் மாசாணத்தேவர் பெயர் மட்டும் உள்ளதாக தெரிவித்தார்கள். ஆனால், அவர் இடத்தில் உள்ள இடத்திற்கு தான் நடப்பாண்டு நான்கு காலாண்டுகள் I,II, III, IV, 2015 வருடம் முதல் 3/2016 வரை செலுத்தி உள்ளாரா ? ஏன் 2015ல் ஆறு மாத காலம் மட்டும் வரி செலுத்திவிட்டு தற்பொழுது மாநகராட்சி ஆணையர் அவர்களால் வரி நிறுத்தம் (Stop) செய்யப்பட்டுவிட்டது என்பதை தங்களுக்கு தெரிவிக்கவில்லை என்பதை பார்வையிட வேண்டுகிறார். சொத்துவரி, முகவரி என்ற இடத்தில் 6வது வார்டில் TS No.564 வெள்ளாளர் தெரு, என்று உள்ளதை பார்வையிட வேண்டுகிறார்.

4.3 வரிசை எண்.3ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது 18/2/2013 தேதியிட்ட ஆணையர் திண்டுக்கல் நாகராட்சியில் வழங்கப்பட்ட சர்வே எண்.564 வரை TS No.564ல் 6வது வார்டு வெள்ளாளர் தெருவில் உள்ளள ஓட்டுவீட்டிற்கு 18/2/2013 தேதியில் ஆணையர் வழங்கிய வரைபடமும், வெள்ளாளர் தெரு என்று தானே இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லாமல் பக்கத்து தெருவில் பெயர் சேணியர் தெரு/அய்யா கண்ணு பிள்ளை சந்து ரசீது என்று வேறு ஒரு முகவரியில் உள்ளது ஏற்புடையதாக இல்லை என்பதை நன்கு கூர்ந்தாய்வு செய்யும்படி வேண்டுகிறார். மேலும் இரண்டு வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் 1966–ல் 550 சதுரடி எடுத்து கொண்ட பிறகு ஒருத்தருக்கு மட்டும் எவ்வாறு 1100 சதுரடி நிலத்திற்கு வரைபடம் வழங்க இயலும் என்பதை சற்று கவனமாக ஆய்வு செய்யும்படி வேண்டுகிறார்.

4.4 வரிசை எண்.4ல் சுட்டிக்காட்டப்பட்டது 18.2.2013 தேதியிட்ட ஆணையம் திண்டுக்கல் நகராட்சியில் வழங்கப்பட்ட சர்வே எண்.564க்கான டவுன்சர்வே ரிஜிஸ்டரின் நகல் மாசாணத்தேவர், த/பெ பச்சமுத்து தேவர் என்று தான் உள்ளதாக உ.மி.பொ/நாகல் நகர்/திண்டுக்கல் அவர்கள் தெரிவித்து இருப்பதையும் அவர்கள் விசாரணையில் கொடுத்த டவுன்சர்வே ரிஜிஸ்டரில் TS No.564ல் வெள்ளாளர் தெரு என்று இல்லாமல் முற்றிலும் உண்மைக்கு புறம்பாக வேறு ஒரு அடியனூத்து (கிராமம்) தெருவின் பெயர் செனியா தெரு

மற்றும் அய்யா கண்ணு பிள்ளை சந்து என்று இருப்பதால் இது போலி ஆவணம் என்று தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது.

4.5 திரு. மாசாணத்தேவர், த/பெ பச்சமுத்து தேவர் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் 550 சதுர அடி இடத்தில் 202–006–1493யை ஏற்கனவே அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் இருப்பதினால் consumer ledger–ல் உள்ளது. அதனை மாற்றம் செய்யாமல் உள்ளது அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் 23–8–2000 முதல் அலுவலக ஆவணத்தில் திரு. மாசனத்தேவர் த/பெ பச்சைமுத்து தேவர் என்று உள்ளதை மட்டும் பார்த்து விட்டு தற்பொழுது 3.1.2015 அன்று shifting செய்து அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டதை தெரிவிக்காமல் இருப்பது ஏன் என்று ஆய்வு செய்ய வேண்டுகிறார்.

4.6 இரண்டு சமூகத்தை சேர்ந்தவர்கள் அவர் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு முறையாக பத்திரப்பதிவுத்துறையில் 550+550 சதுரஅடி இடம் பதிவு செய்து தானசெட்டில்மெண்ட் செய்யப்பட்டதின் நகல் இத்துடன் இணைத்து உள்ளார். மேலும், திரு. மாசாணத்தேவர், த/பெ பச்சமுத்து தேவர் என்பவர் தனக்கு பாத்தியப்பட்ட 550 சதுரஅடி சொத்தை 2000 வருடம் ரெத்தினம்மாள் என்பவருக்கு ரூ.40,000/– (ஒத்தி) ஈடு கடனாக வைத்து உள்ளார். அதனை இன்றைய தேதி வரை திருப்பாமல் இருந்து வருகிறார். அதற்கான (EC) சான்றிதழ் இத்துடன் இணைத்து உள்ளார். எனவே, அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தான550 சதுரடி இடத்தை முறையாக பதிவு செய்யப்பட்டதின் நகல் இத்துடன் இணைத்து உள்ளார் (EC).

4.7 இந்நிலையில் அவருக்கு பாத்தியப்பட்ட பகுதியில் புதிய மின்இணைப்பு சர்வீஸ் 202–006–2163 நாள் 8.7.2015ல் நடப்பாண்டில் வெள்ளாளர் தெரு என்ற பெயரில் இருப்பதையும் ஏற்கனவே உள்ள காளியம்மன் கோவில் தெரு என்ற பெயரில் உள்ள 202–006–1493 ஆகிய சர்வீஸ்சை ஒரு போஸ்டில் இருந்து மாற்றம் செய்து மேற்கண்ட புதிய மின்இணைப்பு மற்றும் பழையது இரண்டையும் அவருக்கு சொந்தமான இடத்தில் அவரது அனுமதி இல்லாமல் மீட்டர்கள் பொறுத்தியதை மின்வாரிய வதி TNERC2003ன் படி குற்றமாகும்.

4.8 ஆனால் 3.7.2015ல் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தற்பொழுது இடம் மாற்றம் செய்ததையும் தெருவின் பெயர் வெள்ளாளர் தெரு என்பதற்கு பதில் அடியனூத்து கிராமம் செனியர் தெரு, அய்யாக்கண்ணு பிள்ளை தெரு என்று உள்ளதை மறைக்க காரணம் என்ன என்று தெரியவில்லை.

4.9 நாள் 27.5.2011ல் அவரது பெயரில் 550 சதுரடி இடத்தை பதிவு செய்யும்பொழுது அவருக்கு தொந்தரவு இல்லாமல் இருந்தது. எனவே, அவர் அதனை அகற்ற சொல்லவில்லை. தற்பொழுது அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் சர்வீஸ் கொடுக்க பிளாஸ்டிக் வயர்மூலம் லயன் இழுத்து போஸ்டில் கட்டும்பொழுது மின்இணைப்பு கொடுக்க மறுப்பு தெரிவித்து இருந்தார். அதற்கு உதவி மின்பொறியாளர்/நாகல் நகர்/திண்டுக்கல் அவர்கள் க.எண்.2கிளை/ நகர்/திகல்/வஆ/கோ.புகார் மனு/அ.எண்.143 /ந.க.எண்.6/11/2015ல் கடிதத்தில் திரு. மாசாணத்தேவர் அவர்கள் வீட்டு வரி ரசீது, தனிவரைப்படம், பட்டா, சிட்டா அடங்கல் ஆகியவற்றை வழக்கறிஞர் மூலமாக அனுப்பியுள்ளார் என்றும் மின் இணைப்பை துண்டிக்க இயலாது என்று பதில் கடிதம் அளித்துள்ளார்.

4.10 திரு. மாசாணத்தேவர், த/பெ பச்சமுத்து தேவர் என்பவர் தற்பொழுது வழங்கிய பட்டா மற்றும் சிட்டா கொடுக்கப்பட்டு உள்ளதா ? என கூர்ந்து ஆய்வு செய்யும்படியும் அவ்வாறு கொடுத்து இருந்தால் அதன் நகலை (பட்டா/சிட்டா) நகல் அவருக்கு கொடுக்கும்படி மிகவும் பணிவுடன் வேண்டுகிறார்.

4.11 திரு.மாசாணத்தேவர், த/பெ பச்சமுத்து தேவர் என்பவரிடம் பட்டா/சிட்டா பெறாமல் சர்வீஸ் கொடுக்க காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்க்கும்படி வேண்டுகிறார்.

4.12 அவரது சொத்து சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்கள் நகல் சமர்ப்பித்து உள்ளார். சர்வீஸ் கொடுப்பதற்கு முன் மறுப்பு தெரிவித்த இரண்டு கடிதங்கள் சபையில் அவர் கொடுத்து உள்ளளார். அதனை பற்றி எந்த தகவலும் ஆணையில் தெரிவிக்கவில்லை என்பது வருந்த தக்கதாக உள்ளது.

4.13 மேலும், TNEB GAZETTEEல் 12.3.2014ல் பக்கம் 616ல் விண்ணப்பதாரர் மின்இணைப்பு பெறும்பொழுது இடத்தின் உரிமையாளர் என்பதற்கு பத்திரம், மூலப்பத்திரம், பாகப்பிரிவினைப் குறிப்பாக மிக முக்கியமாக கணினியில் வழங்கிய பட்டா சான்று கொடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அல்லது அண்மையில் இருக்கும் வீட்டுவரி ரசீது இருந்தால் வரைபடம், டவுன் ரிஜிஸ்டர் நகல் ஆகியவற்றில் வெள்ளாளர் தெரு என்று தான் இருக்க வேண்டும் என்று ஆய்வு செய்யப்படாமல் 2015ல் முதல் ஏப்ரல் முதல் மார்ச் வரை ஒரு வருடம் முழுமையான வரி ரசீது செலுத்தாமல் இருப்பதை வைத்து அவருக்கு அநீதிவிளைவிக்கப்பட்டு உள்ளது என்பதை மேல்முறையீட்டு அலுவலர் ஆகிய தாங்கள் நுண் ஆய்வு செய்தும், நேரடி களவிசாரணை அலுவலர் நியமித்து புகைபடம் எடுத்து அவர் போன்ற சாமானிய மனிதனுக்கு நீதி வழங்கிட ஆவண செய்யும்படி வேண்டுகிறார்.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:-</u>**

5.1 திரு. மாசாணத்தேவர், த/பெ பச்சமுத்து தேவர் இடத்தில் மின்இணைப்பு வழங்க போதுமான இட வசதி உள்ளது. மேலும், மின்இணைப்பு வயர் அடுத்தவர் இடத்தில் கிராசிங் செய்யாமல் பொது இடத்தில் தான் செல்கின்றது. மேலும், மின்இணைப்பு வழங்கும் நாள் வரை மின்இணைப்பு வழங்க கூடாது என்பதற்கான ஆட்சேபனை யாரிடமும் இருந்து இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை.

5.2 மின்இணைப்பு பெற்ற தேதி 8.7.2015 நடப்பு வரைக்கும் அதாவது மின்இணைப்பு பெறும்தேதி வரையில் மாநகராட்சிக்கு வரி செலுத்தியுள்ளார். ஆகவே மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

5.3 மேலும், மாநகராட்சியால் 24.11.2015 அன்று திரு. பொன்னுச்சாமி மற்றும் திரு. மாசானத்தேவர் ஆகிய தங்கள் இருவருக்கும் அனுப்பிய கடிதத்தில் திண்டுக்கல் மாநகராட்சிக்கு கட்டுபட்ட வார்டு எண்.28, கதவிலக்க எண்.31 வெள்ளாளர் தெருவில் அமைந்துள்ள சொத்தின் வரிவிதிப்பு எண்.42416க்கு கட்டுபட்ட சொத்தானது

மாநகராட்சி பதிவுவேட்டின்படி திரு. மாசாணத்தேவர், த/பெ பச்சமுத்து தேவர் என்று உள்ளது. மேற்படி சொத்தின் சர்வே எண்.564.85 க்கு பாத்தியப்பட்டது. அதே சொத்திற்கு வரிவிதிப்பு செய்யக்கோரி திரு. பொன்னுசாமி என்பவரின் விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக உண்மைத்தன்மை உணர திரு. பொன்னுசாமி மற்றும் திரு. மாசானத்தேவர் 13.10.2015 அன்று பத்திர ஆவணங்களுடன் நேரில் ஆஜராக மாநகராட்சியால் அறிவிப்பு அனுப்பப்பட்டு 13.10.2015 அன்று சொத்துவரி விதிப்பு எண்.43416க்கு கட்டுபட்ட ஒரே சொத்திற்கு இரு நபர்களும் இருவேறு ஆவணங்களை சமர்ப்பித்தால் சொத்து தொடர்பாக மாமன்ற வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரு கேட்கப்பட்டு அச்சட்டக்கருத்துருவின் அடிப்படையில் ஒரே சொத்திற்கு இரு நபர்களும் இருவேறு ஆவணங்களை அளித்து தமது சொத்துதான் என வாதிட்டதால் நீதிமன்றம் மூலம் சொத்தின் உண்மைத்தன்மை அறிந்தபின் சொத்திற்கு பாத்தியப்பட்ட நபருக்கு சொத்துவரி பெயர்மாற்றம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆணையாளர், திண்டுக்கல் மாநகராட்சியால் திரு. பொன்னுசாமி மற்றும் திரு. மாசானத்தேவர் ஆகிய இருவருக்கும் கடிதம் மூலம் தெரியப்பட்டுள்ளது. ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்ட கடிதமானது இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

5.4 18/2/2013 அன்று திரு. மாசானத்தேவர் அளித்த TS.NO.564க்கான வரைபடம் 5.10.2015 அன்று திரு. பொன்னுசாமி அவர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மாநகராட்சியிடமிருந்து பெறப்பட்ட TS.NO.564 க்கான வரைபடம் இரண்டிலுமே சேனியர் தெரு, அய்யாகண்ணு பிள்ளை சந்து என்று தான் உள்ளது. எனவே, மாநகராட்சி சர்வே ரிஜிஸ்டரின் பதிவேடுகளின் அடிப்படையில் TS.NO.564ல் எத்தனை தெருக்கள் உள்ளதோ அந்த அடிப்படையில் வழங்கப்பட்ட ஆவணத்தினை திரு. பொன்னுசாமி அவர்கள் போலி என கூறுவது ஏற்புடையதாக இல்லை.

5.5 மின்இணைப்பு எண்.202–006–1493ன் மீட்டர் பலகையானது திரு. மாசாணத்தேவர் த/பெ பச்சமுத்து தேவர் அவர்களால் 3.1.2015 அன்று மின்இணைப்பு இருந்த வீட்டின் வடக்கு பக்க சுவற்றிலிருந்து அதே வீட்டின் கிழக்கு பக்க சுவற்றில் இட மாற்றம் செய்யக்கோரி விண்ணப்பித்ததின் அடிப்படையில் மின் மீட்டர் பலகையானது இடமாற்றம் செய்யப்பட்டது இதில் எந்த இடத்திலும் மின்வாரிய விதிகளை மீறவில்லை எனவும் வாரிய விதிகளுக்குப்பட்டுதான் இடமாற்றம் செய்யப்பட்டது.

5.6 சொத்து தொடர்பான வில்லங்கச் சான்று 1.1.1987 முதல் 12.7.2013 வரை கொடுக்கப்பட்டுள்ளது. இதில்,

(1) ஒரு வில்லங்கச் சான்றில் TS.NO.564ல் (E) மாசாணத்தேவர் ரெத்தினம்மாள் முதல் நபர்களாக வருகின்றார்கள்.

(2) மற்றொரு வில்லங்கச் சான்றில் TS.NO.564 (E) பேச்சியம்மாள் (எ) பாப்பாம்மாள் (C) அருள் மொழியன் முதல் நபர்களாக வருகின்றார்கள்.

இதிலிருந்து முதலில் தெரிவித்த வில்லங்கச் சான்றில் மேற்கண்ட பேச்சியம்மாள் (எ) பாப்பம்மாள் மற்றும் அருள்மொழியன் ஆகியோர் இரண்டாவதாக வருகின்றார்கள். ஆகவே திரு. தி. பொன்னுசாமி த/பெ தியாகராஜன், நாகல் நகர் , திண்டுக்கல் அவர் சமர்ப்பித்த வில்லங்க சான்றே முன்னுக்கு பின் முரணமாக உள்ளது. மேலும், திரு. பொன்னுசாமி அவர்களின் மனுவில் கூறியுள்ளபடி இரண்டு வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் அவர் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு முறையாக பத்திரபதிவு துறையில் 550+550 சதுர அடி இடம் பதிவு செய்து தானசெட்டில்மென்ட் செய்யப்பட்டதின் நகல் இணைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். ஆனால், தானசெட்டில்மென்ட் நகல் ஏதும் இணைக்கப்படவில்லை. மேலும், திருமதி. ரெத்தினம்மாள் என்பவரிடமிருந்து திருமதி. பேச்சியம்மாள் (எ) பாப்பம்மாள் என்பவருக்கு மேற்படி சொத்தானது எவ்வாறு கைமாறியது என்பதற்கான பத்திர ஆவணங்கள் இதுவரையில் ஒப்படைக்கவில்லை.

5.7 திரு. மாசாணத்தேவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பினை துண்டிக்ககோரி திரு. பொன்னுசாமி அவர்கள் அளித்த புகார் மனுவின் மீது மேல்நடவடிக்கை எடுக்கும்பொருட்டு இருதரப்பினரிடமிருந்தும் வருவாய் ஆவணங்களை அளிக்குமாறு கடிதமானது அனுப்பப்பட்டது. அவ்வாறு அனுப்பிய கடிதத்திற்கு திரு. மாசானத்தேவர் அவர்கள் அவரது வழக்கறிஞர் மூலம் பெறப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் திரு. பொன்னுசாமி அவர்கள் அளித்த புகார் மனுவின் மீதான தொடர் நடவடிக்கைக்கு ஏதுவாக 5.11.2015 அன்று திரு. பொன்னுசாமி அவர்களுக்கு சொத்து தொடர்பான ஆவணங்களை கோரி கடிதமானது அனுப்பப்பட்டது.

5.8 TNEB Gazette ல் பக்கம் 515ல் புதிய மின்இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பமானது வாரியத்தால் அனுமதிக்கப்பட்டது. அதில் மின் இணைப்பு கேட்பவர்கள் மின்இணைப்பு கோரும் இடமானது மின்இணைப்பு கேட்பவர்களுக்கு சொந்தமானது தான் என்பதற்கு ஏதாவது ஒரு வருவாய் ஆவணம் மட்டும் இருந்தாலே மின்இணைப்பு வழங்கலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, திரு.மாசாணத் தேவர் த/பெ பச்சமுத்துதேவர் அவர்கள் நகராட்சி வீட்டு வரி ரசீது நடப்பு கணக்கு வரை சமர்ப்பித்ததால் அவருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது.

5.9 சொத்து சம்மந்தமான உரிமையினை முடிவு செய்வதற்கு தகுதி வாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்திற்குதான் அதிகாரம் உண்டு. மேலும், மின்இணைப்பு வழங்கப்பட்ட வீட்டில் நான்கு குடும்பங்கள் வாடகைக்கு குடியிருந்து வருகின்றார்கள். எனவே, அவர்களுக்கு குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை ஜீவாதார காரணிகளால் பாதிப்பு ஏற்படா வண்ணம் வாரியத்தின் நிலைப்பாடு இருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலும்தான் வாரியம் இது குறித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ள இயலாது. என்றே கருதப்படுகின்றது. எனவே, மேல்முறையீட்டாளர் மேற்படி மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள வீடானது தமக்கு பாத்தியமான சொத்து

என்பதனை உரிய ஆவணங்கள் மூலம் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று மின்இணைப்பு எண்.202–006–2163 யை மின்துண்டிப்பு தொடர்பாக உத்தரவு பெற்று வாரியத்திற்கு அளிக்கும்பட்சத்தில் வாரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாகும் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

5.10 மேலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துள்ள விதிகளுக்கு உட்படாவிடின் மின்துண்டிப்பு போன்ற நடவடிக்கை கண்டிப்பான முறையில் மேற்கொள்ளக்கூடாது என்பதாலும் அவ்வாறு மின்துண்டிப்பு போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது மனித உரிமை மீறல் என்ற நிகழ்விற்கு உட்பட்டு தவறான முன் உதாரணத்தினை ஏற்படுத்திவிடக்கூடும் என்பதாலும் மேன்மைமிகு மின்குறை தீர்ப்பாளர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையினை நிராகரித்து உத்தரவு பிறக்கும்படி தங்களை பணிந்து வேண்டப்படுகிறது.

6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

6.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரர்களும், தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 28.6.2016 மற்றும் 10.8.2016 ஆகிய நாட்களில் மின்குறைதீர்ப்பாளரால் கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. தி. பொன்னுசாமி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் திரு. V. கார்த்திக், உதவி பொறியாளர்/நாகல் நகர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.4 மேல்முறையீட்டாளர், மின்துண்டிப்பு செய்ய வேண்டும் என்று கோரியுள்ள மின்இணைப்புகளின் உரிமையாளர் திரு. மாசானத்தேவர் அவர்களையும் 10.8.2016 நடைபெற்ற கேட்புரையில் கலந்து கொண்டு அவருடைய வாதத்தை தெரிவிக்கும்படி கேட்டுக்

கொள்ளப்பட்டது. திரு. மாசானத்தேவர் அவர்களும் திரு. A. திருமூர்த்தி, வழக்கறிஞர் அவர்களும் கலந்து கொண்டு அவர்களது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

7. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 திரு. மாசானத்தேவர் அவர்களின் பெயரில் 2015 வருடம் 6 மாத காலத்திற்கு மட்டுமே வரி செலுத்தப்பட்டுள்ளது. ஆனால், தற்பொழுது மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் வரி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே, மின்இணைப்பை துண்டிக்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

7.2 திரு. மாசானத்தேவரின் மின்இணைப்பு எண்.202–006–1493 அவருக்கு சொந்தமான இடத்தில் இடமாற்றி வைக்கப்பட்டுள்ளது என்றும் 202–006–2163 என்று திரு. மாசானத்தேவரின் பெயரில் புது மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள இடமும் அவருக்கு சொந்தமானது என்று தெரிவித்து அந்த இரண்டு மின்இணைப்புகளையும் துண்டிக்க வேண்டும் என்று வாதுரை புரிந்தார்.

7.3 மேற்கண்ட மின்இணைப்புகள் உள்ள சர்வே எண்.564ல் மொத்தம் 1100 சதுர அடிகள் என்றும் அவற்றில் 550 சதுர அடி திரு. மாசானத் தேவருக்கும், 550 சதுர அடி திருமதி. பேச்சியம்மாள் என்ற பாப்பம்மாளுக்கும் சொந்தம் என்றும் திருமதி. பேச்சியம்மாளின் பேரன் திரு. அருள்மொழியிடமிருந்து அவர் அந்த நிலத்தை வாங்கியுள்ளதாகவும் வாதிட்டுள்ளார்.

7.4 18.2.2013ல் வழங்கிய சர்வே எண். 564ற்கான வரைபடத்தில் சேனியர் தெரு=அய்யா கண்ணு பிள்ளை சந்து என்று உள்ளது என்றும் ஆனல் வீட்டு வரி ரசீதில் வெள்ளாளர் தெரு என்று உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

7.5 மின்இணைப்பு எண்.1493 வழங்கும் பொழுது அது திரு. மாசானத்தேவரின் உரிமை உள்ள வீட்டிலிருந்தது, ஆனால், shifting செய்யும்பொழுது அவருக்கு உரிமை உள்ள பாகத்திற்கு அவரின் அனுமதியில்லாமல் மாற்றியது விதிகளுக்கு புறம்பானது என்றும் வாதிட்டுள்ளார்.

7.6 மேலும், 10.8.2016 அன்று நடந்த கேட்புரை நாளில் திண்டுக்கல் நகரத்தின் சர்வே எண்.564ல் அவருக்கும் கூட்டு பட்டா உள்ளது என்பதற்கு ஆதாரமாக வட்டாட்சியர் நிலவரி திட்டம் திண்டுக்கல் அவர்கள் கையொப்பமிட்ட டவுன் சர்வே ரிஜிஸ்டரின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

8. <u>எதிர்மனுதாரரின் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் : -</u>

8.1 திரு. V. கார்த்திக், உதவி பொறியாளர்/நாகல் நகர் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 உதவி பொறியாளர், மின்இணைப்பு எண்.202–006–1493ன் மீட்டர் பலகையானது திரு. மாசனத்தேவரின் 3.1.2015 நாளிட்ட விண்ணபத்தின்படி மின்இணைப்பு இருந்த வீட்டின் வடக்கு பக்க சுவரிலிருந்து அதே வீட்டின் கிழக்குபக்க சுவற்றில் இடமாற்றம் செய்யப்பட்டது. மேற்கண்ட மாற்றம் விதிகளின்படிதான் செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

8.3 புதிய மின்இணைப்பு வழங்குவதற்கு விண்ணபத்துடன் நகராட்சி வரி செலுத்தியமைக்கான ரசீதின் நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விதிகளின்படி இடத்தின் உரிமையாளர் என்பதற்கு சொத்து வரி செலுத்திய ரசீது இணைக்கப்பட்டால் மின்இணைப்பு வழங்கலாம் என்று உள்ளதால் மின்இணைப்பு வழங்கப்பட்டது என்றும் வாதிட்டார்.

8.4 மேலும், மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள வீடானது அவருக்கு சொந்தமானது என்று நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டு மின்இணைப்பை துண்டிக்க உத்தரவு பெற்று சமர்ப்பித்தால் வாரியம் மின்இணப்பை துண்டிக்க நடவடிக்கை எடுக்கும் என்றும் வாதிட்டார்.

8.5 மேலும், மேற்கண்ட வீட்டில் நான்கு குடும்பங்கள் வாடகைக்கு குடியிருந்து வருகின்றனர். அவர்களுக்கு வேண்டிய குடிநீர் மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் மின்இணைப்பை துண்டிப்பதால் பாதிக்கப்படும் என்பதால் மின்இணைப்பை துண்டிக்க முடியாது என்றும் வாதுரை புரிந்தார்.

8.6 மேலும், மின்கட்டணம் சரியாக செலுத்துவதால் மின்துண்டிப்பு செய்ய விதிகளில் வழியில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

9. <u>திரு. மாசானத் தேவர் அவர்கள் 10.8.2016 கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் :-</u>

9.1 மேல்முறையீட்டாளர் துண்டிப்பு செய்ய கோரும் மின்இணைப்புகள் திரு. மாசானத் தேவர் அவர்களின் பெயரில் உள்ளதால் அவருடைய தரப்பு வாதங்களையும் எடுத்துரைக்கும் பொருட்டு 10.8.2016 நாளில் நடந்த கேட்புரையில் கலந்து கொள்ள அறிவிப்பு கொடுக்கப்பட்டது.

9.2 திரு. மாசானத் தேவர் அவர்களும் அவரது சார்பில் அவருடைய திரு. A. திரு.மூர்த்தி வழக்கறிஞர் அவர்களும் கலந்து கொண்டு தங்களது த ரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

9.3 மேலும், அவர்கள் எழுத்துபூர்வமான வாதுரையையும் அளித்துள்ளார். எழுத்துபூர்வமான வாதுரைகளைத்தான் கேட்புரை நாளில் எடுத்துரைத்தார். எழுத்துப்பூர்வமான வாதுரை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(i) மனுதாரர் மனுவில் 1வது பாராவில் மின்இணைப்பு வழங்கும் போது, அருகில் உள்ளவர்கள் இடத்தில் கிராசிங் செய்தால் அப்ஜெக்சன் ஏதும் இருந்தல் மறுப்பின்மை சான்று வழங்க வேண்டும் என்றும் அவ்வாறு இருந்தால் மின்துண்டிப்பு செய்ய 3ம் தரப்பினர் ஒப்புக்கொள்கிறேன் என்று கூறியதாக கூறி உள்ளதை வன்மையாக மறுக்கிறார். 3ம் தரப்பினர் இதுவரை எழுத்துப்பூர்வமாக ஒப்புதல் கடிதம் கொடுக்கவில்லை.

(ii) மேலும், மனுதாரர் மாசாணத்தேவர் வீட்டுக்கு 2015 ஆண்டு முதல் 2016 வரை மனுவில் உள்ள வீட்டுக்கு வரி செலுத்தி உள்ளாரா என்று கேள்வி எழுப்பி உள்ளார். ஆனால், திரு. மாசானத்தேவர் அவர்கள் மேற்படி சொத்துக்கு 2015 முதல் 2016–17 வரை வரி செலுத்தி உள்ளார்.

(iii) மனுதாரர் தனது மனுவில் 18.2.2013 தேதியிட்ட நகராட்சி ஆணையாளர் திண்டுக்கல் அவர்களால் வழங்கப்பட்ட சர்வே எண்.564க்கான வரைபடத்தில் வெள்ளாளர் தெரு, என்று

இல்லாமல் சேனியர் தெரு, என்றும் அய்யா கண்ணு பிள்ளை சந்து ரசீது என்று உள்ளது ஏற்புடையதாக இல்லை என்பதை நன்கு கூர்ந்து ஆய்வு செய்யும்படி வேண்டுகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையில் 3ம் தரப்பினர் இருக்கும் ஓட்டு வீடானது ஆரம்பத்தில் 1966ல் அடியனூத்து கிராமத்தில் இருந்தது என்றும், திண்டுக்கல் நகராட்சியாக மாறிய பின்னர் மேற்படி இடமானது மாநகராட்சி எல்லைக்கு கட்டுப்பட்டு 6வது வார்டாக இருந்து வருகிறது.

(iv) மேலும், 3ம் தரப்பினருக்கு மேற்படி இடத்தில் 550 சதுரடி மட்டும் உரிமை உள்ளதாக மனுவில் கூறியுள்ளதையும் வன்மையாக மறுக்கிறார். உண்மையில் 3ம் தரப்பினரின் தகப்பனார் உயிரோடு இருந்த காலம் வரையிலும் அதன்பின்பு பச்சமுத்துதேவர் 1983ல் இறந்தபின்பு அவருடைய மகன் என்ற வாரிசுரிமை அடிப்படையில் அனுபவித்து வருகிறார். மேற்படி இடத்துக்கு கடந்த 2000ம் ஆண்டில் நிலவரிதிட்ட வட்டாட்சியர் திண்டுக்கல் அவர்களும் மாநகராட்சி சார் ஆய்வாளர் அவர்களும் வழங்கிய சிட்டா, பட்டா அடங்கல் ஆவணங்களில் 850 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 3ம் தரப்பினர் ஆவணங்களில் 850 அடி உள்ள இடத்தில்தான் இரண்டு மின் இணைப்புகளும் உள்ளது.

(v) மீதி இடமான 250 அடி இடமும் மாசாணத்தேவர் தந்தையான பச்சமுத்து தேவர் பெயரிலேயே இருந்து வருகிறது.

(vi) 3ம் தரப்பினர் உதவி மின்பொறியாளர் நாகல் நகர் அவர்களுக்கு வழங்கி உள்ள ஆவணங்களை போலி ஆவணம் என்று குறிப்பிட்டுள்ளதை 3ம் தரப்பினர் வன்மையாக மறுக்கிறார், கடுமையாக ஆட்சேபனை செய்வதோடு மனுதாரர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க ஆயத்தமாகி வருகிறார். போலியான ஆவணம் என்று மனுதாரர் கூறியிருப்பதை ஏற்கமுடியாது. ஆவணம் உண்மையானதா என்பதை விசாரணை நீதிமன்றம் மட்டுமே உறுதி செய்ய முடியும்.

(vii) மேலும், மனுதாரர் தமது மனுவில் 202–006–1493 மற்றும் 202–006–2163மின்இணைப்பு தனது இடத்தில் உள்ளதாக குறிப்பிட்டு உள்ளதை வன்மையாக மறுக்கிறார்.

(viii) மனுதாரர் குறிப்பிட்டுள்ள மின்இணைப்பு எண்கள் 3ம் தரப்பினரின் வீடு உள்ள இடத்தில் உள்ளதை ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தி உள்ளார்.

(ix) மேலும், மனுதாரர் 11.9.2015 ஆம் தேதி உதவி மின்பொறியாளர், இ–ப/நாகல் நகர் தமிழ்நாடு மின்சார வாரியம் திண்டுக்கல் அவர்களுக்கு கொடுத்த புகார் மனுவில் SC No.202–006–2163 குறித்து மட்டுமே குறிப்பிட்டுள்ளார். மேற்படி புகாருக்கு 3ம் தரப்பினர் மேற்படி மின்இணைப்பு குறித்தும் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து விளக்கம் அளித்துள்ளார். மேலும், மனுதாரருக்கு மின்இணைப்பு குறித்து ஏதாவது ஆட்சேபனை இருந்தால் உரிய நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என்றும் விளக்கமளித்துள்ளார்.

(x) மனுதாரர் தனது புகார் மனுவில் சர்வே எண்.564 உள்ள 550 அடி இடத்தை ரத்தினம்மாள் என்பவருக்கு அடமானம் வைத்து அதனை திருப்பாமல் இருந்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளார். ரெத்தினம்மாள் என்பவரிடமிருந்து 3ம் தரப்பினரான மாசாணத்தேவர் 28.4.2016 தேதி அடமானம் ரத்து செய்து தனது பெயருக்கு எழுதி வாங்கி விட்டார் என்றும், ஆகையால், மனுதாரர் மின்இணைப்பு எண்கள் 2163, 1493 இரண்டும் 3ம் தரப்பினர் பெயரில் உள்ள மேற்படி சர்வே எண்ணிற்கு கட்டுப்பட்ட 850 அடி இடத்தில் தான் உள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 4.11.2015 ம் தேதி திண்டுக்கல் மாநகராட்சி மாமன்ற வழக்கறிஞரும் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க கருத்துருவை வழங்கி உள்ளார்.

10. **<u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>**

மேல்முறையீட்டாளர், எதிர்மனுதாரர், மற்றும், திரு. மாசனத்தேவர் ஆகியோர்களின் வாதங்களை கேட்ட பிறகு, கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு புதிய மின் இணைப்பை வீட்டிற்கு வழங்க வேண்டும் என்றால் விதிகளில் கூறப்பட்டுள்ளது என்ன ?

(ii) திரு. மாசனத்தேவர் அவர்களுக்கு வழங்கிய மின் இணைப்பு எண் 2163 அந்த விதிகளின்படிதான் வழங்கப்பட்டுள்ளதா ?

(iii) மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளான மேற்கண்ட மின் இணைப்பு எண்.2163 மற்றும் மின் இணைப்பு எண் 1493 ஆகியவற்றை துண்டிக்க வேண்டும் என்பது ஏற்புடையதா ?

**11. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு :</u>**

**11.1** ஒரு புதிய தாழ்வழுத்த மின் இணைப்பை பெறுவது சம்பந்தமான விதிகள் பற்றி அறிந்துகொள்ள மின்இணைப்பு வழங்கியது 15.7.2015 என்பதால் அந்த நாளில் அமலிருந்த நாம் தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(3)ஐ ஆராய வேண்டும். அந்த விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*" 27. Requisitions for Supply of Energy:*
*(1) xxx xxx xx*
*(2) xxx xxx xx*
*(3) The application for HT service connection shall be in FORM-4. Application for LT service connection (other than Agriculture and Hut), LT Agriculture service connection and LT Hut service connection shall be in FORM - 1,2 and 3 respectively.*
*Note : Requisitions for supply of energy ( Applications) , even if incomplete, and irrespective of whether they are handed over in person or by post, should be acknowledged in writing. If they are in order, they shall be registered immediately and acknowledged. If they are incomplete, the defects should be indicated and returned without registration.*
*(4). An intending consumer who is not the owner of the premises shall produce a consent letter in Form 5 of Annexure III to this code from the owner of the premises for availing the supply. If the owner is not available or refuses to give consent letter, the intending consumer shall produce valid proof of his/her being in occupation of the premises and also execute an indemnity bond in Form 6 of the Annexure III to this code indemnifying the licensee against any loss on account of disputes arising out of effecting service connection to the occupant and acceptance to pay security deposit twice the normal rate. "*

11.2 மேற்கண்ட விதி 27(3) ன் படி தாழ்வழுத்த மின்சார விவசாயம் தவிர்த்த விண்ணப்பங்கள் படிவம்–1ன் படியும் குடிசைக்கான மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் படிவம்–3ன் படியும் இருக்க வேண்டும். இங்கு வழங்கப்பட்ட மின்இணைப்பு தாழ்வழுத்த வீட்டிற்கான மின்இணைப்பு என்பதால் அதற்கான விண்ணப்ப படிவம்–1 கீழே கொடுக்கப்பட்டுள்ளது

***" FORM - 1***
***Application Form for LOW TENSION Service connection (except Agriculture and Hut)***
***FORM OF REQUISITION FOR SUPPLY OF LOW TENSION ENERGY***
***(Single Phase / Three Phase)***
***(Refer clause 27(3) of Tamil Nadu Regulatory commission, TAMIL NADU ELECTRICITY DISTRIBUTION CODE)***

*To*
*The Designated Engineer*
*(Address of the Licensee)*

*Sir,*

1. *I hereby require you to supply electrical energy to the premises hereinafter described.*

*(Note this undertaking does not preclude a separate written contract being entered into, if so desired by the Licensee or the consumer.)*

*2. I agree to pay for said energy, service connection charges, the deposit of such security, meter rent, as may be demanded in accordance with the scale of rates prescribed under Tamil Nadu Electricity Distribution Code, Supply Code, notifications and orders issued in this regard by Tamil Nadu Electricity Regulatory Commission.*

*3. I wish to be charged under Tariff ………… under schedule of the TNERC tariff order dated…...*

*4. I agree to take supply for ……………. years and utilize the energy in the premises described hereunder or outside the premises for my bonafide use.*

*5. In case I sell or otherwise dispose of the property / vacate the premises while the supply is continued, I agree to give one Calendar month notice in writing and pay all the arrears to the Licensee. Failing such notice, I hold myself responsible for energy consumed in the premises till such notice is given to the Licensee.*

*6. Description of the premises*

*Door No. and / or name of the house or premises*
*Street*
*Town / village and Taluk*

*Owned by (Name in Block letters)*
*Tenanted by (Name in block letters)*

*Applicant's correspondence address*

*7. The following are my requirements*

| ***(A) Lighting*** | *Number of Point's* | *Wattage of point's* | *Total wattage* |
|---|---|---|---|
| *(i) Lights - - -* | | | |
| *(ii) Fans - - -* | | | |
| *(iii) Convenient wall plugs - - -* | | | |
| ***(B )Domestic electrical apparatus**:* | | | |
| *(i)Cookers - - -* | | | |
| *(ii) Water heaters - - -* | | | |
| *(iii) Refrigerator - - -* | | | |
| *(iv) Air Conditioners* | | | |
| *(v) Other purpose - - -* | | | |
| *(vi) Convenience wall plugs---* | | | |
| ***(C) Power Loads*** | | | |
| *(i) Domestic* | | | |
| *(ii) Industrial* | | | |
| *(iii) Welding* | | | |
| *(iv) Other purposes* | | | |
| *(v) Convenient Wall Plugs* | | | |
| *Demand applied for in KW* | | | |

*The wiring has been completed on :*

*Signature of the Consumer*

*Place:*
*Date:*

*Note : The application shall be accompanied with the following documents:*

*i) Certified copy of proof of ownership such as sale deed/partition deed/gift settlement/allotment letter/computer patta/ownership certificate issued by revenue department officials/court judgment or recent property tax receipt.*

*ii) In the case joint property, certified copies of proof of ownership such as legal heir certificate along with parent documents specified in note (i) above and consent letters from co-owners. If consent letter is not produced, an indemnity bond with enhanced security deposit.*

*iii) If the applicant is not the owner, consent letter from owner in FORM No.5 or valid proof of occupancy and indemnity bond in Form No. 6.*

*FOR LICENSEE'S USE ONLY*

Application registered as No. dated

*Note.*

1. *In case of transfer of the service, fresh application should be signed by the transferee (or a letter signed by both the transferor and transferee, agreeing to the above conditions for transfer should be obtained).*

2. *Additions or omissions to the connected load to be notified to the Licensee before effecting the electricity connections.*

*PRECAUTION TO BE ADOPTED BY CONSUMERS, OWNERS ELECTRICAL CONTRACTORS, ELECTRICAL WORKMEN, AND OTHER SUPPLIERS OF ENERGY*

*No electrical installation work, including additions, alterations, repairs and adjustments to existinginstallations except such replacement of lamps, fans, fuses, switches and other component parts of the installations as in no way alter its capacity or character shall be carried out upon the premises or on behalf of any consumer or owner for the purpose of the supply of energy to such consumer or owner, except by an authorized person specified by the Authority.*

11.3 மேற்கண்ட விண்ணப்பத்தின்படி கீழ்கண்ட ஆவணங்களும் இணைத்து விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(i) உடமைகளின் சான்றிடப்பட்ட நகல்களான விற்பனை ஒப்பாவணம்/பாகப்பிரிவினை ஒப்பாவணம்/பரிசு ஒப்பந்தம்/ஒதுக்கீடு கடிதம்/கணினி பட்டா/வருவாய்த்துறை அதிகாரிகளால் வழங்கப்பட்ட உரிமை பத்திரங்கள் /நீதிமன்ற தீர்ப்பு அல்லது சமீபத்தில் செலுத்திய சொத்துவரி ரசீது.

(ii) கூட்டு சொத்து உடமைகளுக்கு உடமைகளின் சான்றிடப்பட்ட நகல்களான சட்டபடியான வாரிசு சான்றிதழ், அதனோடு குறிப்பு(i)ல் கூறப்பட்டிருக்கும் மூல பத்திரங்கள் மற்றும் கூட்டு

உரிமையாளர்களின் இசைவு கடிதங்கள். கூட்டுரிமையாளர்களின் இசைவு கடிதங்கள் இல்லையென்றால் ஈட்டுறுதிப் பிணைமுறியோடு மிகுதிப்படுத்தப்பட்ட காப்பீடு தொகை.

(iii) விண்ணப்பதாரர் உடமையாளர் இல்லை எனில் உடமைதாரரின் இசைவு கடிதம் படிவம்–5ல் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது செல்லத்தக்க குடியிருப்பவர் என்ற சான்றும் மற்றும் 6ல் உள்ள ஈட்டுறுதிப்பிணையுறுதியையும் சமர்ப்பிக்க வேண்டும்.

11.4 எனவே, புதிய மின்இணைப்பு கோருவோர் ஒழுங்குமுறை ஆணையத்தால் வடிவமைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தில் மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தை அதில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**12. <u>வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வு :</u>**

மின் இணைப்பு எண் 2163 வழங்கியது மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி 27 (3) ற்கு இணையாக உள்ளதா என்பதை அறிய நாம், மின் இணைப்பு பெறுவதற்காக சமர்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆராய வேண்டும். எதிர்மனுதாரர் கீழ்கண்ட சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்களை சமர்பித்துள்ளார்.

(i) குறைந்த மின் அழுத்த மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பப் படிவம்

(ii) திண்டுக்கல் மாநகராட்சியின் 2015 – 2016 – I காலத்திற்கான எழுத்துவரி ரசீது எண் 1502893 நாள் 25.5.2015

(iii) நகராட்சி ரெகார்டில் உள்ள அளவு படத்தின் நகல்

(iv) திண்டுக்கல் டவுன் ரிஜிஸ்டார் நகல்

மேற்கண்ட ஆவணங்களின்படி, திரு. மாசனத்தேவர் அவர்கள் விண்ணப்பம் 6.7.2015 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பதிவு எண் 2020715448 ஆகும். அதில் கொடுக்கப்பட்டுள்ள விலாசம், 31, வெள்ளாளர் தெரு, நாகல் நகர், திண்டுக்கல் – 3 ஆகும்

இணைக்கப்பட்டுள்ள திண்டுக்கல் மாநகராட்சியின் ரசீதில் உள்ள வரிவிதிப்பில் கீழ்கண்ட தகவல்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| வரிவிதிப்பு எண் | : | **42416** |
| ரசீது எண் | : | **1502893** நாள் **25.05.2015** |
| வரிவிதிக்கப்பட்டவரின் பெயர் | : | மாசனத்தேவர். P<br>த/பெ பச்சைமுத்துத் தேவர். |
| முகவரி | : | **31**, வெள்ளாளர் தெரு, |
| வார்டு எண் | : | WD/28 |
| வரிவிதிப்பின் காலம் | : | 2015 – 2016 – I |
| செலுத்தப்பட்ட வரி | : | ரூ. **308/–** |

மேற்கண்ட தகவல்களின்படி, விண்ணப்பத்திலுள்ள வீட்டிற்கு சொத்து வரி செலுத்திய ரசீது இணைக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. சொத்துவரி ரசீது ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தின் குறிப்பு **(1)** ல் தெரிவிக்கப்பட்டுள்ள சமீபத்திய சொத்து வரி ரசீது என்பதால், விண்ணப்பம், ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ள ஆவணங்களின்படி பெறப்பட்டுதான் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13. <u>வழக்கெழுவினா மூன்றிற்கான தீர்வு :</u>**

**13.1** மேல்முறையீட்டாளர் மாசனத்தேவரின் மின் இணைப்பு எண் **202 – 006 – 1493** ற்கான மீட்டர் பலகை மின் இணைப்பு வழங்கும் பொழுது, மாசனத்தேவரின் இடத்தில் இருந்தது என்றும் ஆனால் இடம் மாற்றி அமைக்கும்பொழுது, அவருக்கு சொந்தமான வீட்டில் வைக்கப்பட்டுள்ளது எனவே அதை மின்துண்டிப்பு செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

13.2 மேலும், திரு. மாசனத்தேவர் அவர்களின் பெயரில் புதிதாக வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண் 202–006–2163 மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான இடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, துண்டிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

13.3 மேற்கண்ட மின் இணைப்புகள் உள்ள சர்வே எண் 564 ல் மொத்தம் 1100 சதுர அடிகள் என்றும் அவற்றில் 550 சதுர அடி திரு. மாசனத்தேவருக்கும், 550 சதுர அடி திருமதி பேச்சியம்மாள் என்ற பாப்பம்மாளுக்கும் சொந்தம் என்றும், திருமதி பேச்சியம்மாளின் பேரன் திரு. அருள்மொழியிடமிருந்து அவர் அந்த நிலத்தை கிரையம் பெற்றுள்ளதால், 550 சதுர அடிகள் மேல்முறையீட்டாளருக்கு சொந்தம் என்றும், அந்த பகுதியில்தான் இரண்டு மின் இணைப்புகளுக்குமான மின் அளவி பொருத்தப்பட்டுள்ளது என்று வாதிட்டுள்ளார்.

13.4 18.2.2013 ல் வழங்கியுள்ள சர்வே எண் 564ற்கான வரைபடத்தில் சோனியர் தெரு / அய்யாகண்ணு பிள்ளை சந்து என்று உள்ளது என்றும், ஆனால் வீட்டு வரி ரசீதில் வெள்ளாளர் தெரு என்று உள்ளது என்றும் சுட்டிக் காட்டினார்.

13.5 மேலும், சர்வே எண் 564 ல் அவருக்கும் உரிமை உள்ளது என்பதற்கு சான்றாக வட்டாட்சியர் நிலவரி திட்டம் திண்டுக்கல் அவர்களின் கையொப்பமிட்ட டவுன் சர்வே ரிஜிஸ்டரின் நகலையும் சமர்பித்துள்ளார்.

13.6 திரு. மாயாண்டித் தேவர் தனது தந்தை 1983ல் இறந்த பின்பு வாரிசு உரிமையில் மேற்கண்ட இடத்தை அனுபவித்து வருவதாகவும், மேற்படி இடத்திற்கு கடந்த 2000ம் ஆண்டில் நிலவரித்திட்ட வட்டாட்சியர் திண்டுக்கல் அவர்களும், மாநகராட்சி சார் ஆய்வாளர் அவர்களும் வழங்கிய சிட்டா, பட்டா அடங்கலில் 850 அடி அவருக்கு உள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது என்றும், அந்த 850 சதுர அடியில் தான் இரண்டு மின்இணைப்புகளும் உபயோகப்படுத்தப்படுகின்றன என்றும் வாதிட்டுள்ளார். மேலும் மீதமுள்ள 250 சதுர அடி மாசனத் தேவரின் தந்தையான பச்சைமுத்து பெயரில் இருந்து வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

13.7 திரு. மாயாண்டித் தேவர், தன்னுடைய பெயரில் மேற்படி சொத்திற்கு 2015 முதல் 2016–17 வரை சொத்து வரி செலுத்தியுள்ளதாக தெரிவித்து அந்த ரசீதுகளின் நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

13.8 வட்டாட்சியர் திண்டுக்கல் அவர்களின் 2000 நாளிட்ட உத்தரவுப்படி சர்வே எண் 564, தன்னுடைய பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்று தெரிவித்து, அந்த ஆணையின் நகலையும் அளித்துள்ளார்.

13.9 திருமாயண்டிதேவர் உரிமையில் உள்ள ஓட்டுவிடானது. ஆரம்பத்தில் 1966ல் அடியனூத்து கிராமத்தில் இருந்தது என்றும், திண்டுக்கல் நகராட்சியாக மாறிய பின்னர் மேற்படி இடமானது மாநகராட்சி எல்லைக்கு கட்டுப்பட்ட 6வது வார்டாக இருந்து வருகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

13.10 மின்இணைப்பு எண். 202–006–1493 மற்றும் 202–606–2163 ஆகியவைகள் மேல்முறையீட்டாளரின் இடத்தில் உள்ளது என்பதை வன்மையாக மறுக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

13.11 திருமதி. ரத்தினம்மாள் அவர்களிடமிருந்து அடமானம் 28.4.2016 அன்று இரத்து செய்யப்பட்டுவிட்டது என்றும், எனவே இரண்டு மின் இணைப்புகளும் மேற்படி சர்வே எண்ணிற்கு கட்டுப்பட்ட அவரின் பெயரிலுள்ள 850 சதுர அடி இடத்தில்தான் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

13.12 4.11.2015ல் திண்டுக்கல் மாமன்ற வழங்கறிஞரும் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கருத்து (opinion) வழங்கியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

13.13 எதிர்மனுதாரர் மின் இணைப்பு எண். 202–006–1493 ன் மீட்டர் பலகையானது திரு.மாசனத்தேவர் த/பெ. பச்சைமுத்துத் தேவர் அவர்களால் 3.1.2015 அன்று மின் இணைப்பு இருந்த வீட்டின் வடக்கு பக்க சுவற்றிலிருந்து கிழக்கு பக்க சுவற்றில்

இடமாற்றம் செய்யக் கோரி விண்ணப்பத்தின் அடிப்படையில் மின்மீட்டர் பலகையானது இடமாற்றம் செய்யப்பட்டது என்றும் இதில் வாரிய விதிகள் எதுவும் மீறப்படவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

**13.14** சொத்து சம்பந்தமாக உரிமையினை முடிவு செய்வதற்கு தகுதி வாய்ந்த உரிமையல் நீதிமன்றத்திற்கு தான் அதிகாரம் உண்டு. வழங்கப்பட்ட மின் இணைப்பு உள்ள வீட்டில் நான்கு குடும்பங்கள் வாடகைக்கு குடியிருந்து வருகின்றனர். எனவே அவர்களுக்கு குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை ஜீவாதார காரணிகளில் பாதிப்பு ஏற்படாவண்ணம் வாரியத்தின் நிலைப்பாடு இருக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் உடனே மின்துண்டிப்பு செய்ய முடியாது என்று வாதிட்டுள்ளார்.

**13.15** மேலும் மேல்முறையீட்டளார் மேற்படி மின்இணைப்பு கொண்ட வீடானது தனக்கு பாத்தியமான சொத்து என்றும் மின் இணைப்பை எண். 202–006–2163 ஐ துண்டிப்பு செய்ய வேண்டும் என்பதற்கான உரிய உத்தரவை நீதிமன்றத்தில் பெற்று வாரியத்திற்கு அளிக்கும் பட்சத்தில் வாரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்றும் வாதிட்டுள்ளார்.

**13.16** மேலும், மேற்கண்ட இடத்தில் மேல்முறையீட்டாளரின் உரிமை உள்ள இடம் எது என்பதை வருவாய் அதிகாரிகள் மூலம் உறுதி செய்து தக்க சான்று அளித்து மேற்கண்ட மின் இணைப்புகள் அவருடைய நிலத்தில் தான் உள்ளன என்றும் உறுதி செய்தால், வாரியம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் வாதுரை புரிந்தார்.

**13.17** மேலும் எதிர்மனுதாரர், மேற்கண்ட மின்இணைப்புகளுக்கு, மின்கட்டணம் செலுத்தப்பட்டு வருவதாகவும், எனவே மின்துண்டிப்பு செய்ய முடியாது என்றும் வாதிட்டுள்ளார். தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துள்ள விதிகளுக்கு உட்பட்டு மின்துண்டிப்பு போன்ற நடவடிக்கை மேற்கொள்ள கூடாது

என்பதாலும் மின்துண்டிப்பு செய்தால் அது மனித உரிமை மீறல் என்ற நிகழ்விற்கு உட்பட்டு தவறான முன் உதாரணத்தை ஏற்படுத்திவிடக் கூடும் என்றும் வாதிட்டுள்ளார்.

13.18 வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி, மேற்கண்ட மின்இணைப்பு எண். 202–006–2163 என்பது ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துள்ள விண்ணப்ப படிவத்தில் தெரிவித்துள்ள ஆவணங்களில் ஒன்றான சொத்து வரி ரசீதின் படிதான் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேல்முறையீட்டாளரின் பெயரில் சொத்து வரி ரசீது எதுவும் சமர்பிக்கப்படவில்லை. மேல்முறைட்டாளரும் திரு. மாயாண்டி தேவர் பெயரில் உள்ள சொத்து வரி ரசீதில் உள்ள வீட்டில் மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்று வாதிடவில்லை. எனவே மின்இணைப்பு எண்.202–006–2163, ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகளுக்கு இணங்க உள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

13.19 இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் சர்வே எண். 564ல், 550 சதுர அடி தன்னால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து அந்த இடத்தில் தான் மேற்கண்ட மின் இணைப்புகள் உள்ளன என்று வாதிட்டு அவைகளை மின்துண்டிப்பு செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

13.20 திரு. மாசனத்தேவர், மேற்கண்ட மின் இணைப்புகள் உள்ள இடம் அவருக்கும் சொந்தமென்று வாதாடியுள்ளார். இருவரும் தங்களது வாதங்களுக்கு ஆதாரமாக சில ஆவணங்களின் நகல்களை அளித்துள்ளனர்.

13.21 மின் இணைப்பு எண். 202–006–1493ன் மீட்டர் பலகையானது ஏற்கனவே அது இருந்த வீட்டின் வடக்கு பக்க சுவரிலிருந்து அதே வீட்டின் கிழக்கு பக்க சுவரில் தான் விதிகளின்படி மாற்றப்பட்டுள்ளது, எனவே, மாற்றம் சரிதான் என்று வாதிட்டுள்ளார்.

13.22 திரு. மாசனத் தேவர் சமர்ப்பித்துள்ள திண்டுக்கல் நகராட்சி டவுன் சர்வே ரிஜிஸ்டர் நகலில் சர்வே எண்.504ல் உள்ள 85 சதுர மீட்டர் மனை ஓட்டுவீடு மற்றும்

கூரைவீடு திரு. பச்சைமுத்துதேவர் மகன் மாசனத் தேவருக்கும் சொந்தம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்தில் வட்டாட்சியர் நிலவரித்திட்டம் 17.8.15 அன்று கையொப்பம் இட்டுள்ளார்.

13.23 வீட்டுவரி திரு. மாசானத்தேவரின் பெயரில் தற்பொழுது 2016–17 ஆண்டு முழுமைக்கும் பெறப்பட்டு ரசீது எண்.078/DG2/16–17/0013324, dt.5.7.2016 வழங்கப்பட்டுள்ளது.

13.24 மேல்முறையீட்டாளர் சமர்ப்பித்துள்ள திண்டுக்கல் நகராட்சி டவுன் சர்வே ரிஜிஸ்டர் நகலில் சர்வே எண்.504ல் உள்ள 85 சதுரமீட்டர் மனை திரு. பச்சைமுத்துதேவர் மகன் திரு. மாசனத்தேவருக்கும், திரு. தியாகராஜன் மகன் பொன்னுசாமிக்கும் சொந்தம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணத்திலும் வட்டாட்சியர் நிலவரித்திட்டம், திண்டுக்கல் அவர்கள் 6.7.16 நாளிட்ட கையொப்பம் உள்ளது.

13.25 ஒரு இடத்தின் உரிமையை பற்றி தீர்வு செய்ய தகுதி வாய்ந்த நீதிமன்றத்திற்குதான் அதிகாரம் உண்டு. மின்குறைதீர்ப்பாளருக்கு இல்லை.

13.26 கீழ்கண்ட காரணங்களால், மேல் முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

(i) மேல்முறையீட்டாளர் மேற்கண்ட இடம் தனக்கு உரிமை உள்ளது என்பதால் திரு மாசனத்தேவர் பெயரில் உள்ள மின் இணைப்புகளை துண்டிக்க கோருகின்றார். ஒரு சொத்தின் உரிமையைப்பற்றி தீர்மானம் செய்வதற்கு உரிய உரிமையியல் நீதி மன்றத்திற்கு தான் அதிகாரம் உள்ளது. மின் குறைதீர்ப்பாளருக்கு இல்லை. எனவே சொத்தின் உரிமையை அடிப்படையாக கொண்ட மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்கமுடியவில்லை.

(ii) ஒழுங்குமறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட விதிகளின் படிதான் ஆவணங்கள் பெறப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மின் இணைப்பு வழங்கியதில் விதி மீறல் இல்லை.

(iii) மேற்கண்ட மின் இணைப்புகளை வாடகைக்கு இருக்கும் 4 குடும்பங்கள் பயன்படுத்துகின்றன என்றும், மின் கட்டணம் சரியாக செலுத்தப்படுவதாலும் மின்இணைப்பை துண்டிப்பு செய்வது அங்கு குடியிருக்கும் வாடகைதாரர்களின் ஜீவாதார உரிமையை பறிக்கும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

(iv) மேலும், மின்இணைப்பை துண்டிப்பு செய்ய மேல்முறையீட்டாளர் முன்வைத்துள்ள வாதங்கள் மின்வழங்கல் விதித்தொகுப்பில் உள்ள மின்துண்டிப்பு செய்யலாம் என்ற விதிகளுக்கு இணங்க உள்ள காரணங்களாக இல்லை.

**14. <u>முடிவுரை:</u>**

**14.1** என்னுடைய வழக்கெழுவினா ஒன்று, இரண்டு மற்றும் மூன்றிற்க்கான தீர்வுகளின்படி திண்டுக்கல் மின்பகிர்மான வட்டத்தின் மின் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில், மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**14.2** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண். 31/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. தி. பொன்னுசாமி,
த/பெ பொ. தியாகராஜன்,
84/5, ராஜுவ்காந்தி தெரு,
காலேஜ் கவுஸ் ரோடு,
நாகல் நகர்,
திண்டுக்கல் – 3.

2) உதவி பொறியாளர்/இ&ப,
நாகல் நகர்,
திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சவுந்தரராஜா மில்ஸ் ரோடு,
இண்டஸ்ட்டிரியல் ரோடு அருகில்,
திண்டுக்கல் – 624 002.

3) திரு. P. மாசானத்தேவர்,
த/பெ பச்சமுத்துத் தேவர்,
31, வெள்ளாளர் தெரு,
நாகல் நகர்,
திண்டுக்கல்.

4) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
திண்டுக்கல் மின்பகிர்மான வட்டம்,
மீனாட்சி நாயக்கன்பட்டி போஸ்ட்,
திண்டுக்கல் – 624 002.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.